# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.70/2022

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 3ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு அக்டோபர் மாதம் 14 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நரசிம்மலு நாயுடு | மதம் | : இந்து |
| த/பெ | : முத்தியால் நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 70 | கிராமம் | : ராமகிருஷ்ணாபுரம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**14.10.2025**
**வா.சா. 3 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. கண்ணம்ம நாயுடு பெயரில் 20 செண்ட் நிலம் இருப்பதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் நான் சொல்லவில்லை. எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. கண்ணம்ம நாயுடு உயிருடன் இருக்கும்போது அவரது பிள்ளைகள் பாகம் செய்து கொண்டார்களா என்றால் எனக்கு தெரியாது. தணிகாசலம் எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. எனக்கு எந்த விவரமும் தெரியாமல் வாதி அழைத்ததால் சாட்சி சொல்ல வந்தேன் என்றால் ஆமாம்.

**<u>மறு விசாரணை</u>** – நான் குறுக்கு விசாரணைக்கு தணிகாசலம் அழைத்தபோது நீதிமன்றத்திற்கு வர மறுத்துவிட்டேன் என்றால் சரிதான். **(சாட்சி வழக்கறிஞர் கேள்வி கேட்கும் முன்பே தனக்கு தெரியாது என்று கூறினார்)**

<u>நீதிமன்ற கேள்வி</u> - நான் பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து கையெழுத்து செய்ததாக நீதிமன்றம் கேட்ட போது முதல் விசாரணையில் சொன்னேனா என்றால் படித்தார்கள். எனவே சரி என்றேன். தற்போது எனக்கு தெரியாது.

(சாட்சி பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய வாதி தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டது)

குறுக்கு விசாரணை வாதி தரப்பில்

1. நான் அந்த ஊரில் எத்தனை வருடங்களாக உள்ளேன் என்றால் 60 வருடங்களாக உள்ளேன். கண்ணம்ம நாயுடுக்கு பக்தவச்சல நாயுடு, நடராஜ நாயுடு ஆகிய இரண்டு மக்கள் என்றால் சரிதான். கண்ணம்ம நாயுடு மனையில் மேற்கு பக்கம் நடராஜ நாயுடுவும், கிழக்கு பக்கம் பக்தவச்சல நாயுடு வீடும் உள்ளது என்றால் ஆமாம். பக்தவச்சல நாயுடுதான் தணிக்காசலத்தின் தகப்பனார் என்றால் சரிதான். பக்தவச்சல நாயுடு இறந்த பின்பு தணிக்காசலம்தான் அந்த வீட்டில் உள்ளார் என்றால் ஆமாம். அவ்வாறு எத்தனை வருடம் இருக்கிறார் என்றால் எனக்கு விவரம் தெரிந்து இருக்கிறார்.

குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பில்

1. பக்தவச்சல நாயுடு இறந்த பின்பு தணிக்காசலம்தான் அந்த வீட்டில் உள்ளார் என்று சொல்லியிருப்பதில் அந்த வீட்டின் புல எண், நீள அகலம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அந்த வீடு யார் பெயரில் உள்ளது என்றும் யாருக்கு சொந்தமானது என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.